**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 25/2017.**
**வழக்கு சாட்சி – அ.சா. 7 (பட்டியல் சாட்சி – 8).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சுப்புராஜ். | ஜாதி | |
| தந்தை பெயர் | முத்துச்சாமி | தொழில் | ஆசிரியர் (பணி ஓய்வு). |
| கிராமம் | பி.சி. பட்டி | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 74/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.06.2026.

**(1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, பி.சி. பட்டியில் குடியிருந்துகொண்டு, ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். தற்போது, இந்நீதின்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 14.06.2016 ஆம் தேதியன்று பகல் 01.00 முதல் 02.00 மணிக்குள் இருக்கும், அப்போது, திருடுபோன எனது நண்பர் கணேசன் என்பவரது வீட்டில், போலீசார் படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அதில் நானும், கருப்பையா என்பவரும் கையொப்பம் செய்தோம். அந்தப் பார்வை மகசர் **அ.சா.ஆ.4** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

அ.சா.1 கணேசன் எனது உறவினர் ஆவார். நான் கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால், சரியல்ல. அ.சா.1 எனது நண்பர் என்பதால், நான் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த பேப்பரில் கையொப்பம் மட்டும் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.06.22 08:08:15 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**